# 02 நாளாந்தக் கடமைகளில் இறைசிந்தனை

## அ. வீட்டில் சைவம்

மனித நாகரிக வளர்ச்சியுடன் வீடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதர்களின் வாழ்வின் அனைத்து அம்சங்களும் வீட்டினைத் தொடர்புபடுத்தியே பின்னப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானதாக சமயம் கருதப்படுகின்றது. சைவ சமயிகள் அனைவரும் தமது இல்லங்கள் தோறும் சமய சிந்தனையுடனேயே கருமங்கள் அனைத்தையும் ஆற்றுகின்றனர். நாம் காலையில் எழுவதிலிருந்து நித்திரைக்குச் செல்லும்வரை இறைசிந்தனையுடனேயே செயற்படுகின்றோம். காலையில் நித்திரை விட்டெழும்போதே 'சிவசிவ' என்று சொல்லிக்கொண்டே எழுகின்றோம். இதுவே ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும் நாம் ஆற்றும் முதல் இறை வணக்கமாகும். பின்னர், சூரிய நமஸ்காரம் இடம்பெறுகின்றது. தொடர்ந்து வீட்டைக் கூட்டிச் சுத்தப்படுத்துதல், மஞ்சள்நீர், சாணம் என்பவற்றால் வீட்டையும், வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்துகின்றோம். **''தூய்மையான இடங்களில் மட்டுமே இறைவன் உறைவான்''** என்கின்ற சிந்தனையை இது நமக்குத் தருகின்றது.

தினமும் சுத்தமான நீரில் நீராடிய பின்னர், வீட்டிலே சுவாமி அறையிலுள்ள தெய்வப்படங்களுக்குப் பூவும் நீரும் வைத்து, தூப தீபம் காட்டி, பஞ்ச புராணம் பாடி, இறையருளை வேண்டி நிற்கின்றோம். வழிபாட்டின் இறுதியில் 'சிவ சிவ' என்று கூறிக்கொண்டு, நெற்றியில் விபூதி தரிக்கின்றோம். இவ்வாறாக நாம் காலைப் பொழுதுகளில் தினமும் வீடுகளில் இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றோம். சைவசமயிகள் எல்லாப் பொழுதுகளிலும் ஜீவகாருண்யம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அதன் பொருட்டு வீட்டில் வளர்க்கும் பசு முதலிய பிராணிகளுக்கு உணவளித்தல், அவற்றைத் தெய்வங்களாகக் கருதுதல், வறியவர்களுக்கும், இல்லாதோருக்கும் இன்முகத்துடன் உணவளித்தல், பிறருடன் இனிய வார்த்தைகளால் அன்புடன் உரையாடுதல் போன்றன செய்தல் வேண்டும். இவற்றை நாம் நித்திய கருமங்களாக எண்ணி ஆற்றுதல் வேண்டும். சைவசமயிகள் தமது வீட்டுச் சூழலில் ஒரு சிறு பகுதியையாவது ஒதுக்கி, நந்தவனம் அமைத்தல் வேண்டும். நிதமும் அங்குள்ள பூங்கன்றுகளுக்கு நீர்பாய்ச்சுவதோடு, அதிலிருந்தே பூசைக்குரிய மலர்களையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.



அத்துடன் துளசிமாடம் அமைத்து, துளசிச் செடியை வலம் வந்து வணங்குதல் வேண்டும். நாம் உணவு உண்ணுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவனுக்கு நன்றி செலுத்தி விட்டே உண்ணுதல் வேண்டும். நம் முன்னோர்கள் கையாண்ட சமய நற்பண்புகளில் இதுவும் ஒன்று. நாவுக்கரசரின் பின்வரும் தேவாரத்தினை ஓதிய பின்னர் நாம் உணவருந்தும் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

**திருச்சிற்றம்பலம்**

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

**திருச்சிற்றம்பலம்**

நாம் வீட்டிலிருந்து வெளியில் அல்லது வேலைக்குச் செல்லும் போதும் கடவுளை வணங்கி விட்டே செல்லுதல் வேண்டும். அத்துடன் நாம் மீண்டும் வீடு திரும்பியதும் கை, கால், முகம் கழுவிய பின்னர் இறைவணக்கத்தில் ஈடுபடுதல் வேண்டும்.

மாலை வேளைகளில் விளக்கினை ஏற்றித் தூப தீபம் இட்டு, திருமுறைப் பாடல்களைப் பாடுதல், நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் இறைவனைத் துதித்தல், அன்றைய நாள் முழுவதும் செய்த செயல்களை எண்ணிப்பார்த்து அவற்றில் தவறிளைத்த செயல்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டல் வேண்டும். வீட்டில் இடம்பெறும் விசேட தினங்களின் போதும் நமது செயற்பாடுகள் அனைத்தும், இறைசிந்தனைப்பாற்பட்டே காணப்படுகின்றன. குறிப்பாக விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள் ஆற்றப்படும் சந்தர்ப்பங்களில் இறை சிந்தனை மேலோங்கிக் காணப்படுகின்றது. நாம் அனுஷ்டிக்கும் ஒவ்வொரு விரதங்களின் போதும், தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களிலும் நாம் சமய ரீதியாகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும்.

★ வீட்டையும், வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்துதல்
★ வாசலில் மாக்கோலம் இடுதல்
★ மாவிலைத் தோரணம் கட்டுதல்
★ கும்பம் வைத்தல்த
★ மருத்து நீர்வைத்து நீராடுதல் (சித்திரை வருடப் பிறப்பு)
★ தோய்த்துலர்ந்த அல்லது புதிய ஆடைகளை அணிதல்
★ புதிய பாத்திரங்களில் சமைத்த உணவை இறைனுக்கு நிவேதித்தல்
★ பஞ்ச புராணம் ஓதுதல்
★ தானம் செய்தல்

வீட்டுடன் இணைத்து ஆற்றப்படும் சடங்குகள் மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அச்சடங்குகள் இருவகைப்படும். அவை,

1. பூர்வக் கிரியைகள்
2. அபரக் கிரியைகள் என்பனவாகும்.

உயிர் உடலில் இருக்கும் போது ஆற்றப்படும் சடங்குகள் பூர்வக் கிரியைகள் எனப்படும். குறிப்பாக, பெயர்சூட்டுதல், ஏடு தொடங்குதல், உபநயனச் சடங்கு, திருமணச் சடங்கு போன்றன அவற்றுள் சிலவாகும். இவை அனைத்தும் இறை சிந்தனையுடன் நடாத்தப்படுவதோடு, இக்காலங்களில் வீடுகளும் சைவ இல்லங்களாகவே காட்சி தரும்.

உயிர், உடலை விட்டுப் பிரிந்ததும் ஆற்றப்படும் சடங்குகள் அபரக் கிரியைகள் எனப்படும். இதில் முதன்மை பெறுவது மரணச்சடங்காகும். இதன்மூலம் இறந்த ஆன்மாவை இறைவனுடன் இரண்டறக்கலக்கச் செய்வதற்காக சீவனை சிவனாகப் பாவித்து, பல சமயக் கிரியைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறாக, தினமும் காலை முதல் இரவு வரையிலும் மற்றும் விசேட காலங்களிலும் சைவசமயிகள் இறைசிந்தனையுடனும், பக்தியுடனும் தங்களது கருமங்களை ஆற்றி வருகின்றனர்.

## பாடச் சுருக்கம்

நமது செயற்பாடுகள் அனைத்தும் இறைசிந்தனையுடன் கூடியதாகவே இருத்தல் வேண்டும்.

தினமும் நாம் நமது கடமைகளை இறைசிந்தனையுடனேயே ஆரம்பித்து இறைசிந்தனையுடனேயே நிறைவு செய்கின்றோம்.

விரதங்கள், பண்டிகைகள், சடங்குகளின்போதும் நமது கருமங்கள் அனைத்தும் சமய சிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சைவ இல்லம் ஒன்றினை அடையாளப்படுத்தும் விடயங்கள் யாவை?
2. உணவு உண்ண முன் நாம் யாருக்கு நன்றி சொல்லுதல் வேண்டும்?
3. ''அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்..'' எனும் தேவாரம் யாருடையது?
4. சைவப் பண்டிகைகள் இரண்டு தருக.
5. பூர்வக் கிரியைகள் என்றால் என்ன?
6. மரணச்சடங்கில் இறந்த ஆன்மாவை எதனோடு ஒப்பிட்டு சடங்குகள் ஆற்றப்படுகின்றன?

## செயற்பாடு

இன்றைய காலச்சூழலில் சைவ இல்லம் ஒன்றின் அவசியம் குறித்து ஐந்து நிமிடத்திற்கான பேச்சு ஒன்றினைத் தயார்செய்து கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பேசிக்காட்டுக.

காலைக் கூட்டம்
சமய விழாக்கள்
வெள்ளிக்கிழமை பிரார்த்தனை
ஊர்க் கோவில்பூசை

## ஆ. பாடசாலையில் சைவம்

வீட்டிற்கு அடுத்தபடியாக சமய, சமூக விழுமியங்களை மாணவர்களின் மனங்களில் உருவாக்கும் இடம் பாடசாலை ஆகும். இங்கு சமயம் சார்விடயங்கள் மேலும் மெருகூட்டப்படுகின்றன. பாடசாலையில் ஆற்றப்படும் பலதரப்பட்ட விடயங்கள் சமய சிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. பாடசாலைகளில் இடம்பெறும் அன்றாடச் செயலொழுங்கில் பின்வரும் விடயங்கள் சமயம் சார், இறை சிந்தனைசார் விடயங்களாக அமைந்து விடுகின்றன.

- ★ காலைப்பிரார்த்தனை
- ★ தினமும் வகுப்பறையிலுள்ள சுவாமிப் படங்களுக்கு மலர்தூவி, விளக்கு ஏற்றுதல்.
- ★ ஆசிரியர், வகுப்புக்கு வரும் போது மரியாதையுடன் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல்.
- ★ எழுதும் போது பிள்ளையார் சுழி இடல்.
- ★ வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடல்.
- ★ பாடசாலை நிறைவுறும் போது பிரார்த்தனையுடன் நிறைவு செய்தல்.

அத்துடன் சில பாடசாலைகளில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு, அங்கு தினசரிபூசைகள் இடம்பெறுவதோடு மாணவர்கள் அப்பூசைகளில் கலந்துகொண்டு இறைவழிபாட்டில் ஈடுபடுவதுமுண்டு. ஆலயங்கள் இல்லாத பாடசாலைகளில் மாணவர்கள் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள ஆலயங்களுக்குச் சென்று, அங்கு இடம்பெறும் பூசைகளில் பங்குபற்றி இறைசிந்தனையுடன் வழிபடுவர்.

இவை தவிரப் பாடசாலைகளில் இடம்பெறும் சமய விழாக்களும் மாணவரிடத்தே பக்தியையும், இறை சிந்தனையையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிவராத்திரி விரதம், நவராத்திரி விரதம் போன்றன குறிப்பிட்டுக் கூறத்தக்கனவாகத் திகழ்கின்றன. இவ் விரதங்களின் போது மாணவர்களுக்குப் பல்வேறுவித ஆற்றல்களுடன், விழுமியங்களும் சேர்த்தே வளர்க்கப்படுகின்றன. அவற்றுள் சில:

**தலைமைத்துவம்**
**பொறுப்புணர்வு**
**குழு ஒருமைப்பாடு**
**பிறருக்கு மதிப்பளித்தல்**
**சமூக நல்லிணக்கம்**

இக்காலங்களில் சில பாடசாலைகளில் சமயம் சார்போட்டி நிகழ்ச்சிகளும் நடாத்தப் படுவதுண்டு. குறிப்பாக கோலப்போட்டி, மாலைகட்டல் போட்டி, தோரணம் கட்டல் போட்டி, பேச்சுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், நாடகப் போட்டிகள், ஆன்மீக உரைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதன்மூலம், மாணாக்கரின் திறமைகள் வெளிக்கொணரப்படுவதுடன், பக்தியுணர்வும் சமயம் பற்றிய தெளிவும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் இக்காலங்களில் கலாசாரம் பற்றிய உணர்வும் ஏற்படுவதற்கான வாய்ப்பும் கிட்டுகின்றது.

பாடசாலைகளில் இடம்பெறும் சமய விழாக்களின்போது இடம்பெறும் சமயச் சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், நற்சிந்தனைகள், கலைநிகழ்ச்சிகள் போன்றனவும் மாணவர்களின் சமயச்சிந்தனைக்கு வித்திடுகின்றது. பாடசாலைகள், நாயன்மார்களது குருபூசைகளையும் ஆற்றுதல் வேண்டும். இதன்போது சிறுபராயத்திலிருந்தே நாயன்மார்கள் சமயத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தவிதம் பற்றியும், அவர்கள் ஆற்றிய சமயத் தொண்டுகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கும், அவர்கள் வழிநின்று தம்மால் ஆற்றக்கூடிய சமூக, சமயத் தொண்டுகள் பற்றி எண்ணிப் பார்ப்பதற்கும், புரிவதற்கும் வாய்ப்புகள் ஏற்படும். தமது பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள ஆலயத் திருவிழாக்களின் போது, பாடசாலை சார்பாகத் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், அன்னதானமிடல், சுவாமி ஊர்வலத்திற்கு உதவுதல் போன்ற சமயப்பணிகளில் மாணவர்களை ஈடுபட வைப்பதிலும் பாடசாலைகள் முன்னின்று வழிகாட்டுதல் வேண்டும்.

## பாடச் சுருக்கம்

வீட்டிற்கு அடுத்தபடியாக சமய உணர்வினை ஏற்படுத்துவது பாடசாலையாகும்.

பாடசாலையில் இடம்பெறும் பலசெயற்பாடுகள் சமயச் சிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன.

பாடசாலையில் இடம்பெறும் சமயச் செயற்பாடுகளால், மாணவர்களிடத்தே பல்வேறு திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நாம் எழுதத்தொடங்கும்போது கைக்கொள்ள வேண்டிய விடயம் யாது?
2. பாடசாலைகளில் இடம்பெறும் அன்றாட சமயச் செயலொழுங்குகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. பாடசாலைகளில் இடம்பெறும் முக்கிய சமய விழாக்கள் எவை?
4. பாடசாலைகளில் குருபூசைத் தினங்கள் கொண்டாடப்படுவதால் உங்களிடத்தே ஏற்படக்கூடிய மாற்றங்கள் எவை?
5. ஆலயத் திருவிழாக்களின்போது எம்மால் ஆற்றக்கூடிய திருப்பணிகள் எவை?


## செயற்பாடு

உங்கள் ஊர்க் கோவிலில் இடம்பெறும் திருவிழாவின் போது, உமது ஆசிரியரின் உதவியுடன், தண்ணீர்ப்பந்தல் ஒன்றினை அமைத்து, பக்த அடியவர்களுக்குத் தாகம் தீர்க்கும் பணியினைச் செய்க.

# இ. ஆலயமும் சமுதாயமும்

சமூக நன்மையின் பொருட்டும், ஆன்மீகத்தை வளர்க்கும் பொருட்டும் ஆலயங்கள் தோற்றம் பெற்றன. பொதுவாக ஆலயங்கள் ஆன்மீக நிலையங்கள் என்கின்ற கருத்தே இன்று மேலோங்கிக் காணப்படுகின்றது. எனினும் வரலாற்றுக் காலகட்டங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஆலயங்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

சோழர் காலப்பகுதியில் ஆலயங்கள் சமூகத் தொண்டுகள் பலவற்றைப் புரிந்துள்ளமையை நாம், வரலாற்று ஆதாரங்களின் மூலமாக அறிகின்றோம். இக்காலப் பகுதியில் ஆலயங்கள் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டு விளங்கியுள்ளன. மன்னனின் ஆணை, கட்டளைகள் என்பன ஆலயங்களில் வைத்தே மக்களுக்குக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் மக்களுக்குக் கடன் வழங்கும் வங்கிகளாகவும், கலைகளின் இருப்பிடமாகவும், தமிழர் பண்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்ந்துள்ளன.


**சோழர் காலச் சிற்பங்கள்**

சோழர்காலக் கோயில்களில் இசை, நடனம், நாடகம், ஓவியம், கட்டடம், சிற்பம் போன்ற கலைகளும் மக்களின் சமூக நோக்குக் கருதி வளர்த் தெடுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் மண்டபங்களில் இசை, நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதோடு, அதில் பங்கேற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி அவர்கள் ஊக்குவிக்கப்பட்டும் உள்ளனர்.

வெளி ஊர்களில் இருந்து வரும் பக்தர்கள் மற்றும் ஏனையோர் களைப்பாறிச் செல்லும் இடமாகவும் இக்காலக் கோயில்கள் செயற்பட்டுள்ளன. அத்துடன் அரசனுடைய முடியாட்சி விழாக்கள், பிறந்தநாள் விழாக்கள் என்பனவும் இங்கு கொண்டாடப்பட்டுள்ளன.

சோழர்காலக் கோயில்கள் பண்டகசாலைகளாகவும், தொழில் வாய்ப்பினை வழங்கும் நிறுவனங்களாகவும் விளங்கியுள்ளன. அத்துடன், மிகமுக்கிய சமூகப்பணியாக மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் கல்விக் கூடங்களாகவும் இவ்வாலயங்கள் விளங்கியுள்ளன. போதனா வகுப்புக்களை ஆலயங்களே நடாத்தி வந்துள்ளன. மேலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை, சோதிடம், மருத்துவம் சம்பந்தமான கல்வியும் இவ்வாலய மண்டபங்களிலே போதிக்கப்பட்டுள்ளன. சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், புராண இலக்கிய அறிவுரைகளை மக்களுக்கு வழங்கும் இடமாகவும் ஆலயங்கள் விளங்கியுள்ளன.

இவ்வாலயங்கள் மக்களுக்கு உணவு வழங்கும் அன்ன சத்திரங்களாகவும், நோய் தீர்க்கும் மருத்துவ கூடங்களாகவும் திகழ்ந்துள்ளன. இயற்கை அழிவுகள் ஏற்படும் போது, ஆலயங்களிலேயே மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறாக சோழர் காலக் கோயில்கள் அளப்பரிய சமூகப்பணிகளை ஆற்றி வந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் அனைத்தையும் வைத்து நோக்குகின்றபோது, ஆலயங்கள் பக்திக்குரிய இடமாக மட்டுமன்றி, சமூகத் தொடர்புகளைக் கொண்ட தாபனங்களாகவும் விளங்கியுள்ளதை அறியமுடிகின்றது.

இப்பணிகள் ஆலயங்களிலே இன்றும் தொடர்வதைக் காணமுடிகின்றது. இன்று



மாணாக்கருக்கு அறநெறிகளைப் போதிக்கின்ற மிக முக்கிய பணியை பல ஆலயங்கள் மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் விழாக்களின் போது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும் ஆலயங்கள் முன் நிற்கின்றன. சில ஆலயங்களிலே சிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்கள் அனுஷ்டிக்கப்படுவதோடு அதனையொட்டி சமயம் தொடர்பான போட்டிகளையும் நடாத்தி, அவற்றில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களையும் வழங்கி ஊக்குவிப்பதைக் காண முடிகின்றது.

இன்று பல ஆலயங்கள் மகோற்சவத்தின் போதும், பூரணைத் தினங்களின் போதும், ஏனைய விசேட தினங்களின் போதும் மக்களுக்கு உணவளிக்கும் அன்னதானப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. சமூகத்தில் வசதி படைத்தோர் ஆலயங்களைப் பெரிதாகவும் பல மண்டபங்களையும் அமைத்து வருவதால், இயற்கை அனர்த்தங்களின்போது மக்கள் அங்கு சென்று தஞ்சமடைந்து வாழ்கின்றமைக்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றன. அத்துடன் தலயாத்திரிகர்களுக்கான தங்குமிட வசதிகளையும் பல ஆலயங்கள் கொண்டுள்ளன.

பல ஆலயங்களில் ஆலயத்தையொட்டியோ, ஆலயத்திற்குப் புறம்பாகவோ கலாசார மண்டபங்களை அமைத்து திருமண வைபவங்களுக்கான மண்டப வசதிகளையும் செய்து கொடுத்துள்ளன. அத்துடன் இம் மண்டபங்களிலே, சொற் பொழிவுகள் போன்றவற்றை நடாத்தி மக்களுக்கு விழிப்பூட்டும் ஏற்பாடுகளையும் செய்து வருகின்றன.

இன்றைய சமூகம் பல்வேறுவிதமான சமூக அச்சுறுத்தல்களைச் சந்தித்துள்ளது. இவற்றிலிருந்து மக்களை விடுவிக்கும் பொருட்டு ஆலயங்கள் இன்னும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, ஆன்மீக ரீதியாக மக்களை ஒன்று திரட்டும் பணிகளைச் செய்யவேண்டிய பொறுப்பினைக் கொண்டிருக்கின்றன.

## பாடச் சுருக்கம்

ஆலயங்கள் பக்திக்குரிய இடமாக மட்டுமன்றி சமூக நிறுவனங்களாகவும் விளங்குகின்றன.

சோழர்கால ஆலயங்கள் இப்பணியினை செவ்வனே செய்து வந்துள்ளன.

ஆலயங்கள் கலை வளர்க்கும் இடமாகவும், அன்ன சத்திரங்களாகவும், வைத்தியசாலைகளாகவும், வங்கிகளாகவும், கல்விக் கூடங்களாகவும் விளங்கியுள்ளன.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சோழர் காலத்தில் மன்னர்கள் தங்களது ஆணைகளை எங்கிருந்து மக்களுக்கு அறிவித்ததாகக் கூறப்படுகின்றது.

2. சோழர்காலக் கோயில்கள் வளர்த்தெடுத்த சில கலைகளைக் குறிப்பிடுக.

3. ஆலயங்களில் கல்வியாகப் போதிக்கப்பட்ட விடயங்கள் யாவை?

4. ஆலயங்கள் ஊடாக ஆற்றப்பட வேண்டும் என நீர் எதிர்பார்க்கின்ற சமூகப் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

உமது ஊர் ஆலயம் சமூகத்தோடு கொண்டுள்ள தொடர்புகளை அடிப்படையாக வைத்து ஒப்படை ஒன்றினைத் தயாரிக்குக. அதனை ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடுக.